989

பாலியர் மித்திரன்

The Children's Friend

MAY, 1931

TURE SOCIETY FOR INDIA
AD RANGOON COLOMBO

CH
0-7 8e
N31
181440

சென்னை கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார்

புதிதாய் அச்சிட்ட புத்தகங்கள்

முதற் புத்தகம்	By S. G. Daniel, B.A.	விலை,	2½	அணா.
இரண்டாம் புத்தகம்	do.	,,	3	,,
மூன்றாம் புத்தகம்	do.	,,	4	,,
நான்காம் புத்தகம்	do.	,,	4½	,,
ஐந்தாம் புத்தகம்	do.	,,	5	,,
பாலர் பாட அநுபந்தம்	do.	,,	3	,,

வித்தியா மாலிகை

பால பாடம்	விலை,	1½	அணா.
முதற் புத்தகம்	,,	3	,,
இரண்டாம் புத்தகம்	,,	4	,,
மூன்றாம் புத்தகம்	,,	4½	,,
நான்காம் புத்தகம்	,,	5	,,
ஐந்தாம் புத்தகம்	,,	7	,,

C. L. S. தமிழ் வாசக புத்தகங்கள்

முதற் பாடம்	விலை,	1½	அணா.
முதலாம் வாசக புத்தகம்	,,	3	,,
இரண்டாம் வாசக புத்தகம்	,,	4	,,
மூன்றாம் வாசக புத்தகம்	,,	4	,,
நான்காம் வாசக புத்தகம்	,,	4½	,,
ஐந்தாம் வாசக புத்தகம்	,,	5	,,
ஆறாம் வாசக புத்தகம்	,,	5	,,

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

Post Box 501, Park Town, Madras

No. 5. மே 1931

பாலியர் மித்திரன்

'எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டது'

ஒரு ஊரிலே இருந்த வர்த்தகன் ஒருவன் பெரிய நகரத்திலிருந்த தன் சிநேகிதனைப் பார்க்க வெகு காலங்கழித்துப் போனான். அநேக நாட்களாய்க் காணமல் இருந்த தன் சிநேகிதனைக் கண்ட சந்தோஷத்தினால் சிநேகிதனும் அவன் மனைவியும் வந்த வர்த்தகனை வெகுபட்சமாய் ஏற்றுக்கொண்டு, ஒப்புடன் முகமலர்ந்து உண்மையாய் உபசரித்தார்கள். வர்த்தகனும் சிநேகிதன் வீட்டில் சில நாட்களாய்த் தங்கியிருந்து நகரத்திலிருந்த பற்பல காட்சிகளைக் கண்டு களித்தான்.

வர்த்தகன் சிநேகிதன் வீட்டுக்கு வந்தபோது, தன்னிடம் இருந்த விலையுயர்ந்த இரத்தினங்கள் அடங்கிய ஒரு பெட்டியை அவன் வசம் ஒப்புவித்து, பத்திரமாய் வைத்திருக்கக் கேட்டுக்கொண்டான்.

சிநேகிதன் அந்தப் பெட்டியை வெகு பத்திரமான இடத்தில் வைப்பதாக வாக்களித்து வாங்கிக் கொண்டான். வர்த்தகன் அங்கிருந்து புறப்படுமுன் அந்த வீட்டாருக்கு அவர்கள் காட்டிய அன்புக்கும் உபசரணைக்கும் அதிக வந்தனமளித்து, தான் கொடுத்து வைத்திருந்த இரத்தினமடங்கிய பெட்டியைக் கேட்டான்.

உடனே சிநேகிதனுடைய மனைவியின் முகம் மாறி: இரத்தினமாவது. பெட்டியாவது—என்ன உமக்கு ஏதோ புத்திமாறாட்டமாயிற்றோ? நாங்கள் உமக்குச் செய்த மரியாதைக்கு எங்களை மோசக்காரராக்க வந்தீரோ என்றாள். அவள் புருஷனும் அவ்வாறே இரத்தினக்கல் பெட்டியைக் குறித்துத் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சாதித்துவிட்டான்.

புருஷனும் மனைவியும் ஒரே பிடிவாதமாய்த் தங்களிடம் இல்லை என்று சாதித்ததைக் கேட்டு வர்த்தகன் திகைத்து: ஐயோ! தெய்வமே, என்ன செய்வேன். இந்த அக்கிரமத்தை உன்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லுவேன். எனக்குச் சாட்சி சொல்ல எவருமில்லை. நீயே துணை என்று பெருமூச்சுவிட்டு, அந்நகரத்துப் போலீசாரிடம் நடந்த அநியாயத்தைத் தெரிவித்தான். அவர்கள் எவ்வளவோ பிரயாசப்பட்டும், சாட்சி ஒன்றுமில்

லாதபடியால் என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கிக்கொண்டிருந்தார்கள்.

பின்பு அவர்கள் அந்த ஊருக்கு அப்பால் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பேர்பெற்ற நீதி விசாரணைத் துரையினிடம் வர்த்தகனையும் அவன் சிநேகிதனையும் அழைத்துக் கொண்டுபோய், நடந்த வழக்கைத் தெரிவித்தார்கள். நியாயாதிபதி வர்த்தகனை நோக்கி: நீ கொண்டு வந்த வழக்குக்குச் சாட்சி ஏதாகிலும் உண்டா என்றான். அவன்: சாட்சி ஒன்றுமில்லை. தெய்வந்தான் சாட்சி என்று சொல்லி, தன் சட்டைக்குள்ளிருந்து ஒரு சின்ன சாவியை எடுத்துக்காட்டி: இதைத் தவிர வேறெந்த சாட்சியும் எனக்கில்லை என்றான்.

வர்த்தகனின் சிநேகிதனைப் பார்த்து நியாயாதிபதி கேட்டதற்கு: நான் ஒன்றும் அறியேன், இந்த வர்த்தகன் வெகுநாட் கழித்து என் வீட்டுக்கு வெறுங்கையாய் வந்தான். நான் பழைய பள்ளிக்கூட சிநேகிதனுகையால், அவனுக்கு அன்பு பாராட்டி அதிகமாய் உபசரித்தேன். அதற்குப் பதிலாய் இரத்தினப் பெட்டியை எடுத்துக்கொண்ட மோசக்காரன் என்று என்னை எங்கும் தூற்றுகிறுன் என்றுன்.

நியாயாதிபதிவெகுநேரமாய் ஆலோசித்து, அவர்கள் இருவரையும் சற்றுநேரம் அமைதியாய் உட்

காரப்பண்ணி, மற்ற வழக்குகளை விசாரித்துக் கொண்டிருந்தான். பின்பு திடீரென்று ஒரு சிறு பெட்டியைக் காட்டி, அந்த சிநேகிதனை நோக்கி: அந்தப் பெட்டி இதிலும் பெரிதா, சிறிதா என்று கேட்டான்.

சிநேகிதனே அந்தக் கேள்வியினால் கொஞ்சமும் அசையாமல்: ஐயா, நான் பெட்டியைப் பார்த்ததே இல்லையே. பார்க்காத பொருளைப்பற்றிப் பெரிதா, சிறிதா, வெள்ளையா, கறுப்பா என்று நான் எப்படி சொல்லக்கூடும் என்று அதிக யோக்கியன்போல் பேசினான்.

நியாயாதிபதி என்ன செய்வதென்று திரும்பவும் நெடுநேரம் ஆலோசித்து, சிநேகிதனைத் தனியே அழைத்து, அவனிடம் ஒரு வெள்ளைக் காகிதத்தைக் கொடுத்து: நான் சொல்லுகிறபடி இதில் எழுது என்று கட்டளை கொடுத்து: என் பிரிய மனைவியே, எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டது; ஆகையால் இதைக் கொண்டுவருகிற சேவகனிடம் இரத்தினப்பெட்டியைத் தடையில்லாமல் அனுப்பிவிடு என்று எழுதச் சொன்னான்.

இப்படி நீதிபதி சொன்னதைக் கேட்டதும், சிநேகிதன் தன் ஆசனத்தை விட்டெழுந்து: நான் அப்படி ஒருபோதும் எழுதமாட்டேன் என்றான். நீதிபதி: நீ நான் சொன்னபடி எழுதாவிட்டால், நீயே

கள்ளன், உன்னைச் சிறையில் போடுவேன் என்ருன். உடனே சிநேகிதன் பயந்து, நீதிபதி சொன்ன படியே எழுதினுன்.

எழுதிவிட்டு அப்புறம் இப்புறம் ஓடிப்போகலாமோ என்று வழி பார்த்துக்கொண்டிருந்தான். நியாயாதிபதி அவனைச் சுற்றிலும் சேவகர் நின்று காத்திருக்கச் செய்தான்.

வெகு நேரமானபின் கடிதங் கொண்டுபோன சேவகன் ஒரு அழகிய சிறு ரத்தினப் பெட்டியோடு திரும்பினுன்.

நியாயாதிபதி வர்த்தகனிடமிருந்த சாவியை வாங்கி பெட்டியைத் திறந்து பார்க்கையில், அதிலிருந்த விலையேறப்பெற்ற ரத்தினக் கற்களைக் கண்டு அவனும் அங்குள்ளோரும் பிரமித்துப் போனுர்கள்.

நீதிபதி இதைக் கண்டதும், ஊரிலே பெரிய மனுஷன் என்று பேரெடுத்தவன் இப்படிப்பட்ட பாதகத்தைச் செய்தபடியால், அவனையும் அவன் மனைவியையும் அவ்வூரில் வையாமல், தீவாந்தரத்துக்கு அனுப்பும்படி கட்டளையிட்டான்.

வேதபாலியர் கதை

3. அடிமையாய் விற்கப்பட்டு அதிகாரியான சிறுவன் கதை

(3) அரசன்முன் நின்று அதிகாரியானது

ராஜாவுக்குப் பானங்கொடுக்கிறவன் சிறையிலிருந்து வெளியாகி சுமார் இரண்டு வருஷமாகியும், அவனால் யோசேப்புக்கு யாதொரு நன்மையும்

உண்டாகவில்லை. யோசேப்பு சிறைச்சாலையிலிருந்து தனக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையை வழக்கம் போல் உண்மையாய்ச் செய்துவந்தான். கடவுளும் அவனோடிருந்தார்.

காரியம்இப்படியிருக்கையில், அத்தேசத்து ராஜாவாகிய பார்வோன் ஒரே இராத்திரியில் வெவ்வேறான இரண்டு சொப்பனங்களைக் கண்டு, அதன் கருத்தொன்றும் விளங்காமல் கலங்கி விழித்தான்.

விடியற்காலமானதும், ராஜா தன் தேசத்திலுள்ள சகல சாஸ்திரிகளையும் மந்திரவாதிகளையும் அழைப்பித்து, தான் கண்ட சொப்பனங்களைச் சொல்லி, அவற்றின் தாற்பரியம் என்னவென்று கேட்டான். அவர்கள் எவ்வளவோ யோசித்துப் பார்த்தும், அதின் அர்த்தம் இன்னதென்று ஒருவராலும் சொல்லக்கூடாமற்போயிற்று.

இதனால் அரசனும் மந்திரவாதிகளும் ராஜ்யத்தின் பிரபுக்களும் கலக்கமாயிருக்கையில், ராஜாவின் பானபாத்திரக்காரன்: மகாராஜாவே, வாழ்க, உமது அடியானும் அப்பஞ்சுடுகிறவர்களின் தலைவனும் சிறையில் இருந்த காலத்தில், ஒரே இரவில் இருவரும் வெவ்வேறு சொப்பனங்களைக் கண்டோம். அச்சமயத்தில் தலையாரிகளுக்கு அதிபதியானவரிடம் அடிமையாயிருந்த ஒரு எபிரேய பால்யன் எங்களோடு சிறையிலிருந்தான். அவன் எங்கள் இருவர் சொப்பனத்தையும் கேட்டு, அர்த்தம் சொன்

ஒன் அதின்படியே ஆண்டவன் என்னைத் திரும்ப வும் ஊழியத்தில் வைத்துக்கொண்டு, அப்பஞ்சுடு கிறவர்களின் தலைவனைத் தூக்கில் போடுவித்தீர் என்றான்.

ராஜாவும் அவன் பிரபுக்களும் இதைக் கேட்ட போது, சிறையிலிருந்த யோசேப்பை உடனே அழைத்துவரக் கட்டளையிட்டார்கள். இந்த ராஜ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, யோசேப்பு சவரம் செய்துகொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, ராஜா வுக்குமுன் வெகு பணிவோடு வந்து நின்றான். ராஜா அவனை நோக்கி: நீ ஒரு சொப்பனத்தைக் கேட் டால், அதின் சரியான அர்த்தத்தைச் சொல்வாய் என்று கேள்விப்பட்டேன் என்றான்.

அதற்கு யோசேப்பு பிரதியுத்தரமாக: நான் அல்ல, கடவுளே ராஜாவின் சொப்பனத்துக்குச் சரியான அர்த்தத்தை வெளிப்படுத்துவார் என் றான். (படம் பார்க்க.)

அப்பால் அரசன் யோசேப்பை நோக்கி: என் சொப்பனத்திலே நான் நதியோரத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது அழகும் புஷ்டியு மான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து, புல் மேய்ந்தது. அவைகளின் பின் இளைத்ததும் மகா அவலட்சணமும் கேவலமுமான வேறு ஏழு பசுக் கள் ஏறிவந்து, கொழுமையான முந்தின ஏழு பசுக் களையும் பட்சித்துப்போட்டது. பின்னும் நான்

என் சொப்பனத்தில் நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளரக்கண்டேன். பின்பு சாவியானவைகளும் கீழ்க்காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்து, அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப்போட்டது. இதன் பொருளை விடுவிக்கிறவன் எவனும் இல்லை என்றான்.

அப்போது யோசேப்பு ராஜாவை நோக்கி: ராஜாவே, உமது இரண்டு சொப்பனங்களும் ஒன்று தான். கடவுள் தாம் செய்யப்போகிறது இன்னதென்பதை உமக்கு முன்னதாகத் தெரிவித்திருக்கிறார். நீர் கண்ட ஏழு நல்ல பசுக்களும் ஏழு நல்ல கதிர்களும் ஏழு செழிப்பான பரிபூரண விளைச்சல் உள்ள வருஷங்களாம். அவைகளின் பின் காணப்பட்ட ஏழு கேவலமான பசுக்களும் சாவியான கதிர்களும் ஏழு பஞ்சமான வருஷங்களாம். பஞ்சம் பயங்கரமானதாயிருக்குமாகையால், ராஜா ஞானமும் விவேகமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, எகிப்து தேசத்துக்கு அதிகாரியாக ஏற்படுத்துவது நலமாயிருக்கும். செழிப்பான காலத்தில் தானியம் சேர்த்துவைத்தால் பஞ்சகாலத்தில் உதவும் என்றான்.

இந்த அர்த்தமும் ஆலோசனையும் அரசனுக்கும் அங்கு கூடிவந்த ராஜ சபை அனைத்துக்கும் நல்லதாகத் தோன்றினதினால், ராஜா யோசேப்பை

நோக்கி: நான் உன் விவேகத்தையும் ஞானத்தையும் கண்டு உன்னையே எகிப்து தேசமெங்கும் அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி அவன் கையிலே போட்டு, பட்டுப் பட்டாவளியை அவனுக்கு உடுத்தி, பொற் சரப் பணியை அவன் கழுத்திலிட்டு, தன்னுடைய இரண்டாவது இரதத்தின்மேல் ஏற்றி எகிப்து தேச முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்.

அதிகமாய்த் தாழ்த்தப்பட்ட யோசேப்பு கடவுளின் கிருபையால் அதிகமாய் உயர்த்தப்பட்டான்.

ஓர் நாஸ்திகனும் வானசாஸ்திரியும்

அத்தனேசியு கர்ச்சர் என்னும் ஒரு வானசாஸ்திரி இருந்தார். அவர் அதிக அருமை பெருமையாய் எண்ணி மதித்துவந்த ஒரு சிநேகிதன் இருந்தான். அவன் கடவுள் இல்லையென்று சாதித்த நாஸ்திகன். இது சாஸ்திரிக்கு மிகுந்த விசனத்தை உண்டுபண்ணிற்று.

கர்ச்சர் தன் சிநேகிதன் கடவுள் உண்டு என்று நம்பி, நாஸ்திகனயிருப்பதைவிட்டு ஆஸ்திகனாக மாறவேண்டுமென்று எவ்வளவோ அவனுடன் வாதித்தும், அதினால் ஒரு பயனும் உண்டாகவில்லை.

கடைசியில் தன் சிநேகிதனது தோஷகரமான துன்னெறியினின்று அவனை விலக்கி, நன்னெறியில் கொண்டுவரும்படி ஒரு உபாயஞ் செய்தார். அஃதென்னவெனில், மகா அலங்காரமும் பருமனுமான ஓர் ககோள உண்டையை வாங்கி, அதைத் தமது வீட்டில் யாவர் கவனத்தையும் கவரத்தக்கதான ஓர் இடத்தில் வைத்துவிட்டு, மேற்படி சிநேகிதனைக் கண்டு பேசும்படி வழக்கம்போல் அழைப்பித்தார்.

அவன் வீட்டுக்குள் பிரவேசித்தவுடன், சொல்லரிய அலங்காரம் பொருந்திய மேற்படி உண்டையைக் கண்டு, வானசாஸ்திரி எண்ணியிருந்தபடியே அது யாருடையதென்றும் அதைக் கொண்டுவந்தது யாரென்றும் ஆவலாய் விசாரித்தான்.

அதற்கு சாஸ்திரி: அது ஒருவருடையதும் அல்ல, அதை ஒருவர் கொண்டுவரவும் இல்லை, தானாய் அங்கே வந்ததுபோல் தோன்றுகிறது என்றார். இதைக் கேட்ட சிநேகிதன் அதிக ஆச்சரியத்துடன் சாஸ்திரியை நோக்கி: என்ன ஐயா, கேலிபண்ணுகிறீர்போல் தோன்றுகிறது. இந்த உண்டையை ஒருவரும் உண்டாக்காமலும் ஒருவரும் கொண்டு வாராமலும் இங்கே தானாய் முளைத்தது என்கிறீர்; இதை நான் நம்ப முடியாது. என்னைப் பரியாசம் பண்ண இப்படிப் பேசுகிறீர் என்றான்.

உடனே சாஸ்திரியார்: நண்பனே, வானஜோதிகளைச் சாடையாய் மாத்திரம் காண்பிக்கிற இந்த சிறு உண்டை தற்செயலாய் இங்கு வந்துவிட்டதென்று நம்ப உமக்கு மனமில்லை. என்றாலும் விள்ளறிய விசேஷங்கள் அமைந்த ஆகாயத்திலுள்ள வானஜோதிகள் ஒரு சிருஷ்டிகரும் ஒழுங்கும் நோக்கமுமில்லாமல் வந்துவிட்டது என்று வாதித்து நிற்கிறீரே. இது சரியா என்று யோசித்துப்பாரும் என்றார்.

இதைக் கேட்ட அந்நாஸ்திகனாகிய சிநேகிதன் முந்தி மனந்தடுமாறி, பிற்பாடு கடவுளுண்டு என்று தெளிவடைந்து மண்ணையும் விண்ணையும் மகா ஞானமாய் சிருஷ்டித்த அவரது மகத்துவத்தை நினைத்து அவரைப் போற்றிப் புகழ்ந்தான்.

ஐரோப்பாவில் காலன் என்னும் பெயருடைய கீர்த்திபெற்ற ஒரு வைத்தியர் நெடுங்காலம் நாஸ்திக கோட்பாடு உடையவராய் இருந்தார். ஆனால் மனிதனின் தேகக் கட்டைப் பரிசோதித்து, அதின் சர்வ அங்கங்களின் பொருத்தத்தையும் தசை, எலும்பு, நரம்பு முதலியவற்றின் அமைப்பையும் பிரயோஜனத்தையும் ஆராய்ந்தறிந்தவுடன், சட்டென்று பரவசமடைந்து, தமது வேலையை விட்டெழுந்து, தமது சிருஷ்டிகரும் பரிபாலகருமான கடவுளுக்குப் புகழ்ச்சியாக ஓர் தோத்திரக் கவி பாடினார்.

"ஒவ்வொரு வீடும் ஒரு மனிதனால் உண்டாக்கப்பட்டிருக்கிறது; சகலத்தையும் உண்டாக்கினவரோ கடவுள்."

சிங்கமும் கழுதையும் நரியும்

ஒரு சிங்கமும் கழுதையும் நரியும் ஒன்றுகக்கூடி ஒருமித்து வாழ உடன்படிக்கை செய்துகொண்டது. அப்படி கூடிவாழ ஒத்துக்கொண்ட முதல்நாளிலே அவை மூன்றும் காட்டிலே திரிந்து, தங்களுக்கு அகப்பட்ட இரையை எல்லாம் கொண்டு வந்து ஒருமிக்க சேர்த்தன.

இரை அதிகமாய் இருந்தபடியால், சிங்கம் கழுதையைப் பார்த்து: நான் நீராடி வருவதற்குள் இரையை எல்லாருக்கும் பிரித்துவை என்று கட்டளையிட்டுப் போனது.

கழுதை சிங்கத்தின் சொற்படியே மூன்று பேருக்கும் ஒரு இமைப்பிசகில்லாமல் சமமாய்ப் பிரித்துவைத்தது.

கொஞ்சமும் பிசகில்லாமல் கழுதை இவ்வளவு சரியாய்ப் பங்கிட்டிருப்பதைக் கண்ட நரி அதிகமாய் ஆச்சரியப்பட்டது.

சிங்கம் நீராடி வந்தபின் இரை சரிசமானமாய் எல்லாருக்கும் பிரித்துவைத்திருப்பதைக் கண்டு, அதிக கோபங்கொண்டு கழுதைமேல் பாய்ந்து ஒரே அடியில் கொன்றுவிட்டது.

சற்று நேரமானதும், சிங்கம் நரியைப் பார்த்து: இந்த இரையை எல்லாம் எடுத்து நம்மிருவருக்கும் பிரித்து வை என்றது.

நரி இதைக் கேட்டு இரையை எல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து, அதில் முக்காலுக்கு அதிகமான பாகத்தைச் சிங்கத்துக்கு வைத்து விட்டு, மீதி கொஞ்ச பாகத்தை மாத்திரம் தனக்கு வைத்துக்கொண்டது.

சிங்கம் இதைக் கண்டு அதிக சந்தோஷப்பட்டு இரையைத் தின்கையில், நரியை நோக்கி: நீ இவ்வளவு நேர்த்தியாய்ப் பிரித்து வைக்க எப்படிக் கற்றுக்கொண்டாய் என்றது. அதற்கு நரி: தாங்கள் கழுதைக்குக் கொண்டு வந்த முடிவைக் கண்டு, இதைக் கற்றுக் கொண்டேன் என்று வெகு பயபத்தியோடு சொல்லிற்று.

சிங்கம் நகைத்து: கழுதை கழுதையாகை யால், அதற்குப் புத்தியில்லை, நீ நரியாகை யால், உபாயத்தோடும் புத்தியோடும் இதைச் செய்தாய் என்றது.

18-ம் வேத ஆராய்ச்சி வினாக்கள்

ஜலப்பிரளயம்

1. நோவாவின் காலத்தில் நடந்த பெரிய சம் பவமென்ன?
2. ஜலப்பிரளயம் உண்டானதற்குக் காரணம் என்ன? (ஆதி. 6: 5, 11)
3. நோவா எப்படிப்பட்டவனு யிருந்தான்? (6: 9)
4. அவன் எதைக்குறித்துப் பிரசங்கித்தான்? (2 பேது. 2: 5)
5. கடவுள் எதைச் செய்ய நோவாவுக்குக் கட் டளையிட்டார்?
6. பேழையை எந்த மரத்தால் செய்தான்?
7. பேழையின் நீளம் அகலம் உயரமென்ன?
8. அதைச் செய்ய எவ்வளவு காலம் சென்றது?
9. அதற்குள் எத்தனை மனிதர், யாரால் அடைக் கப்பட்டார்கள்?

10. வேறு எவைகளும் அதற்குள் அடைக்கப்பட்டன?

11. நோவா பேழையைச் செய்கையில் ஜனங்க குணப்பட்டார்களா? (லூக். 17: 27)

12. மழை எத்தனைநாள் விடாமல் பெய்தது?

13. பேழை எந்த மலையின்மேல் தங்கினது?

14. நோவா பேழையில் எவ்வளவு காலம் தங்கியிருந்தான்?

15. பூமியில் தண்ணீர் வற்றிப்போயிற்றென்று எதினால் கண்டுபிடித்தான்? (ஆதி. 3: 7–12)

16. நோவாவுக்கு இப்போது வயது என்ன?

17. நோவா பேழையை விட்டு வெளியே வந்ததும் என்ன செய்தான்?

18. அப்போது கடவுள் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? (8: 20–22)

19. அதற்காக அவர் கொடுத்த அடையாளம் என்ன? (9: 12, 13)

20. நோவாவின் விசுவாசத்தைக் குறித்துச் சொல்லியிருப்பது என்ன? (எபி. 11: 7)

DIOCESAN PRESS, MADRAS 1931—B 2017

VILLAGE SERIES

TAMIL

	A	P
No. 1. Jesus Opens the Eyes of the Blind Beggar. இயேசு பிச்சைக்காரக் குருடனின் கண்ணைத் திறந்தது. (பக்கம் 8)	0	1
). 2. 'Who are Blessed.' பாக்கியவான்கள் யார்? (பக்கம் 6)		
3. The Bravery of Sogoro. சோகோரோவின் தைரியம். (பக்கம் 6)	0	1
4. What Do You Buy in the Drink Shop? சாராயக்கடையில் எதை வாங்கலாம்? (பக்கம் 16)	0	1
No. 5. Some Ancient Good Sayings. பழைய காலத்து நல்மொழிகள். (பக்கம் 16)	0	1
No. 6. The Excellent Offerings of Three Poor Women. மூன்று ஏழை ஸ்திரீகள் கொடுத்த உத்தம காணிக்கை. (பக்கம் 16)	0	1
No. 7. Father Damien the Lepers' Friend. தாமியன் சுவாமியார் குஷ்டரோகிகளின் நேசன். (பக்கம் 16)	0	1
No. 8. The Teaching of Jesus about The Growing Grain. வளரும் பயிர்—இதைப் பற்றிய இயேசுவின் போதனை. (பக்கம் 20) ..	0	2
No. 9. The Story of Christopher. கிறிஸ்தோபேரின் சரித்திரம். (பக்கம் 16)	0	1
No. 10. Sore Eyes. கண்ணோய். (பக்கம் 12).	0	1
No. 11. The Mosquito—our Enemy. கொசு என்னும் நமது சத்துரு. (பக்கம் 20)..	0	2

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Post Box 501, Park Town, Madras

பாலியர் மித்திரன்

THE CHILDREN'S FRIEND

(Formerly called The Mission School Magazine)

THE **Paliar Mittiran** is a bright Magazine for children containing stories, anecdotes, nature studies and object-lessons and pages in large type for those in the lowest classes edited by Rev. V. Vedanayagam, Madras. The subscription (exclusive of postage) is *one anna* for one copy a month for twelve months.

பாலியர் மித்திரன். சிறுவர்க்கேற்ற இப்பத்திரிகையில் சரித்திரங்களும், விநோதமான பொருட்பாடங்களும், படிக்க ஆரம்பிக்கிறவர்களுக்குப் பெரிய அட்சரங்களில் சில கதைகளும் அடங்கியிருக்கிறதினாலே பிள்ளைகள் இதை ஆவலாய் வாசிப்பார்கள். இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 1

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற்கூலி மிகவும் குறையும்.

மாதர் போதினி

THE MAGAZINE FOR THE HOME

THE **Mathar Bodhini** provides pure and attractive reading for the family circle. Teachers in Girls' Schools, Bible-women and Zenana workers will find it specially helpful.

மாதர் போதினி என்னும் பத்திரிகையில் பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களும், சுகவழியைப்பற்றிய போதனைகளும், மதுபானத்திற்கு விரோதமான எச்சரிக்கைகளும், பல கதைகளும், உபமானங்களும் அடங்கியிருப்பதினால் குடும்பத்தில் யாவரும் இதை விருப்பத்தோடு வாசிப்பார்கள். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கும் வேதாகம ஸ்திரீகளுக்கும் உபாத்திமார்களுக்கும் இது விசேஷமாய் உபயோகமுள்ளது. இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 6.

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற்கூலி மிகவும் குறையும்.

கடிதங்கள், கையொப்பப்பணம் அனுப்புவோர் அவைகளை அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

CHRISTIAN LITERATURE SOCIETY, POST BOX 501, MADRAS